


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.10.2023) சென்னையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில், சீன நாட்டின் ஹாங்சூவில் நடைபெற்ற 19வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டை சார்ந்த 20 வீரர் வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக 9 கோடியே 40 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி, வாழ்த்தினார். இவ்விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதிமாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் மரு. எழிலன், இ. பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே. சிற்றரசு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவர்கள் அசோக் சிகாமணி, இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை

முதல் பக்கத் தொடர்ச்சி...

**இந்திய அளவில் தமிழ்நாடு 5-வது இடம்!**

இந்தியா மொத்தமாக வென்ற 107 பதக்கங்களில், தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்கள் மட்டும் 28 பதக்கங்களைப் பெற்றுள்ளனர். இந்திய அளவில் பார்த்தால் நமது மாநிலம் ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ளது.

பல்வேறு பதக்கங்களை வென்ற 20 விளையாட்டு வீரர்களுக்கு இன்று 9 கோடியே 40 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகை பரிசுகள் வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

அகில இந்திய அளவிலே, உலகளவிலான போட்டிகளில் தொடர்ந்து உங்களது பங்களிப்பை செலுத்துமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். தொடர்ச்சியான பதக்கங்கள் பெறுவதும், தொடர் வெற்றிகளைப் பெறுவதும்தான் உங்களுக்கும் பெருமை; நமது தமிழ்நாட்டுக்கும் பெருமை; ஏன் இந்தியாவிற்கே பெருமை!

இந்தப் பாராட்டு உங்களுக்கும் உங்களது வெற்றிக்கும் மட்டுமல்ல; நீங்கள் இன்னும் பல வெற்றிகளைப் பெற வேண்டும் என்று ஊக்கமளிக்கவும் உங்களைப் போல இன்னும் பல வீரகள் உருவாக அடித்தளமாக அமைய வேண்டும் என்பதற்காகவும்தான். உங்களைப் பார்த்து இன்னும் ஏராளமான வீரர்களும் வீராங்கனைகளும் உருவாவார்கள் என நம்புகிறேன்.

எந்தவொரு அரசாக இருந்தாலும், ஏதாவது ஒரு குறிப்பிட்ட ஒரு சில துறைகளில் மட்டும் அதிக கவனம் செலுத்தும். ஆனால் நம்முடைய திராவிட மாடல் அரசானது, அனைத்துத் துறைகளிலும் அதிகக் கவனம் செலுத்துவதன் மூலமாக, அனைத்துத் துறைகளையும் ஒருசேர வளர்த்து வந்து கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக சில துறைகள் ஸ்டார் துறைகளாக வளர்ந்து வருகின்றன. அதில் விளையாட்டுத் துறையும் ஒன்று!

இந்தத் துறையின் அமைச்சர் ஒரு ஸ்டாராக இருப்பதால், இந்த துறையும் ஸ்டார் துறையாக வளர்ந்துவிட்டது. விளையாட்டுத் துறையின் மூலமாக, விளையாட்டு வீரர்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த இளைய சமுதாயமும் எழுச்சி பெற்று வருகிறது. நாள்தோறும் தமிழ்நாடு முழுவதும் ஏராளமான விளையாட்டுத் துறை நிகழ்ச்சிகள் நடந்து கொண்டே இருக்கின்றன. அதிலும், அமைச்சர் உதயநிதி அவர்கள் நடந்து அல்ல, ஓடிக் கொண்டே இருக்கிறார்.

அந்தத் துறையின் கேப்டனாக இருந்து, அனைத்து வகை விளையாட்டு வீரர்களையும் சாம்பியன்களாக ஆக்கிக் கொண்டு இருக்கிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். அவருக்கும் அவரது துறையைச் சார்ந்த உயரதிகாரிகளுக்கும் அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த இரண்டரை ஆண்டுகளில் இந்த துறை உலகமே வியந்து பார்க்கும் பல்வேறு சாதனைகளைச் செய்துள்ளது. அதில் மிக முக்கியமானது 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டி. இனி யாரும் இப்படி நடத்த முடியாது என்று சொல்லத்தக்க வகையில் மெச்சத்தக்க வகையில் மிகக் குறுகிய காலத்தில் வெகு சிறப்பாக நடத்தி முடித்துக் காட்டினோம்.

அதேபோல் இந்த இரண்டு ஆண்டுகளில், பன்னாட்டு மற்றும் தேசிய அளவில் பதக்கங்கள் வென்று இந்தியாவிற்கும் மற்றும் தமிழ்நாட்டிற்கும் பெருமை தேடித் தந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த 1,864 விளையாட்டு வீரர்களுக்கு மொத்தம் 52 கோடியே 82 லட்சம் ரூபாய் மதிப்பிலான உயரிய ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**விளையாட்டு உள் கட்டமைப்பு வசதிகள் மேம்படுகிறது!**

'முதலமைச்சர் கோப்பை' என்ற பெயரில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், பொதுப் பிரிவினர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு மாவட்டம் மற்றும் மாநில அளவில் சிலம்பம், கபடி, கால்பந்து, கூடைப்பந்து உள்ளிட்ட 15 வகையான போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. இதில், மாவட்ட மண்டல அளவில் இந்த ஆண்டு ஏறக்குறைய 3 லட்சத்து 71 ஆயிரம் வீரர்கள் பங்கேற்றனர். மண்டல அளவிலான போட்டிகளில் 27 ஆயிரத்து 54 வீரர் வீராங்கனைகள் பங்கெடுத்தார்கள். இந்த முதலமைச்சர் கோப்பை போட்டிகளை நடத்துவதற்கு 50 கோடியே 86 லட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்தோம். இதில் பரிசுத் தொகை மட்டும் 28 கோடியே 30 லட்ச ரூபாய்!

மாநிலத்தில் விளையாட்டு மேம்பாட்டிற்காக பொதுமக்கள் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களுடன் இணைந்து 'Tamil Nadu Champions Foundation' என்கிற அறக்கட்டளை உருவாக்கப்பட்டுள்ளது. நிறுவனங்களும் இதர அமைப்புகளும் அளிக்கும் கூட்டாண்மைச் சமூகப்பொறுப்பு நிதிகளை ஒன்றுதிரட்டி இதனைச் செய்யலாம். இதன் மூலமாக நம் மாநிலத்தின் விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பட்டு வருகிறது.

கடந்த ஜூன் 13 முதல் ஜூன் 17 வரை ஸ்குவாஷ் உலகக் கோப்பையை வெற்றிகரமாக நடத்திக் காட்டினோம். இந்தப் போட்டியில் ஜப்பான், மலேசியா, ஹாங்காங், தென்னாப்பிரிக்கா, எகிப்து, ஆஸ்திரேலியா, கொலம்பியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த உலகின் முன்னணி ஸ்குவாஷ் வீரர்கள் கலந்து கொண்டனர்.

தேசிய அளவிலான கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி 2023 நமது மாநிலத்தில் நடைபெற உள்ளது. விளையாட்டு உள்கட்டமைப்பில் அரசு அதிநவீன கட்டமைப்புகளை உருவாக்கி வருகிறது. சென்னையில் விளையாட்டு நகரம் அமைக்கப்பட உள்ளது,

**ஒலிம்பிக் அகாடமிகள் அமைக்கப்படுகிறது!**

ஒலிம்பிக் மற்றும் சர்வதேச விளையாட்டுகளில் விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக சென்னை, மதுரை, திருச்சி மற்றும் நீலகிரியில் ஒலிம்பிக் அகாடமிகள் அமைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு ஊராட்சியிலும் உள்ள கிராமங்களில் விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட உள்ளது. சட்டமன்றத் தொகுதிகளில் சிறு விளையாட்டரங்கங்களை அரசு அமைத்துவருகிறது.

ஒருபுறம் துவக்க நிலையில் உள்ள விளையாட்டு வீரர்களையும், மறுபுறத்தில் விளையாட்டில் சிறந்து விளங்குபவர்களையும் ஊக்குவிக்க நமது அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமளிப்பதைப் போலவே, விளையாட்டுமீதான ஆர்வத்தை அனைத்து மாணவ, மாணவியருக்கும் ஏற்படுத்த வேண்டும் என்று அமைச்சர் அவர்களையும், விளையாட்டுத் துறை அதிகாரிகளையும் நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

போட்டிகளில் கலந்து கொள்வது விளையாடுவது என்பது உடல் வலிமையும் உள்ள வலிமையும் தொடர்புடையது! படிக்கும் காலத்தில் மாணவ, மாணவியர் அனைவரும் ஏதாவது ஒரு விளையாட்டைத் தேர்ந்தெடுத்து அதில் பங்கெடுக்கும் வகையில் ஊக்கப்படுத்த வேண்டும்.

**அறிவை விரிவு செய் உடலை உறுதி செய்!**

'அறிவை விரிவு செய்' என்பதைப் போலவே, 'உடலை உறுதி செய்' என்பதும் நமது முன்னெடுப்பாக இருக்க வேண்டும். அறிவை விரிவு செய்ய பள்ளி கல்லூரி அளவில் ஏராளமான முன்னெடுப்புகளைச் செய்து வருகிறோம். அதேபோல் உடலை உறுதி செய்ய அதற்கான முன்னெடுப்புகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை செய்ய வேண்டும்.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ள தமிழ்நாடு, முதலிடத்துக்கு முன்னேற வேண்டும் என்றும் கேட்டு, அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் மீண்டும் ஒருமுறை எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## ஸ்டார் துறையின் ஸ்டார் அமைச்சர்!



**இந்தத் துறையின் அமைச்சர் ஒரு ஸ்டாராக இருப்பதால், இந்த துறையும் ஸ்டார் துறையாக வளர்ந்துவிட்டது. விளையாட்டுத் துறையின் மூலமாக, விளையாட்டு வீரர்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த இளைய சமுதாயமும் எழுச்சி பெற்று வருகிறது. நாள்தோறும் தமிழ்நாடு முழுவதும் ஏராளமான விளையாட்டுத் துறை நிகழ்ச்சிகள் நடந்து கொண்டே இருக்கின்றன. அதிலும், அமைச்சர் உதயநிதி அவர்கள் நடந்து அல்ல, ஓடிக் கொண்டே இருக்கிறார்.**

**அந்தத் துறையின் கேப்டனாக இருந்து, அனைத்து வகை விளையாட்டு வீரர்களையும் சாம்பியன்களாக ஆக்கிக் கொண்டு இருக்கிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். அவருக்கும் அவரது துறையைச் சார்ந்த உயரதிகாரிகளுக்கும் அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.**


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பூங்கா (ம) விளையாட்டுதிடல் துறை**

கலைஞர் 100 1924 - 2023

பூ.து.ந.க.எண்.பி2/1959/2023

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

மேற்பார்வை பொறியாளர் (பூங்கா (ம) விளையாட்டுத்திடல் துறை) அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**"சிங்கார சென்னை 2.0"** திட்டத்தின் கீழ் மண்டலம்-5, 6, 7, 9, 10, 11, 13 மற்றும் 15 வரையில் உள்ள பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத்திடல்கள் அமைக்கும் பணிகள் (16 சிப்பங்கள்) **(Two Cover System)**

**குறைந்தபட்சம் ரூ.26.27 இலட்சம், அதிகபட்சம் ரூ. 177.23 இலட்சம்**
**முன்வைப்பு தொகை மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%**

| | |
|---|---|
| ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் | : **02.11.2023** அன்று மாலை **3.00** மணி வரை |
| ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் | : **03.11.2023** அன்று மாலை **3.30** மணி |

மேலும் விவரங்களுக்கு **www.tntendersgov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 5583 / ஒப்பந்தப்புள்ளி / 2023 — **கண்காணிப்பு பொறியாளர் (பூ (ம) வி)**


### இந்தியாவில் நடைபெறும்

# பொதுத் தேர்தல்களில் நடுநிலையுடன் செயல்பட வேண்டும்!

## முகநூல் , கூகுள் நிறுவனங்களுக்கு இந்தியா கூட்டணித் தலைவர்கள் கடிதம்!

புதுடெல்லி, அக். 14 -

இந்தியாவில் விரைவில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல்களில் நடுநிலையுடன் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பேஸ்புக் மற்றும் கூகுள் நிறுவனங்களுக்கு இந்தியா கூட்டணி கட்சி தலைவர்கள் கடிதம் எழுதியுள்ளனர்.

அமெரிக்காவைச் சேர்ந்த முன்னணி செய்தித் தாளான வாஷிங்டன் போஸ்ட், சமூகவலைதளங்களான பேஸ்புக், வாட்ஸ் அப் மற்றும் யூ டியுப் ஆகியவை ஒன்றியத்தில் ஆளும் மோடி அரசுக்கும், பாஜகவுக்கும் ஆதரவாக பாகுபாடுடன் செயல்படுவதாக செய்தி வெளியிட்டிருந்தது.

இதை சுட்டிக்காட்டி, பேஸ்புக் தலைமை செயலதிகாரி மார்க் ஜூகர்பெர்க், கூகுள் தலைமை செயலதிகாரி சுந்தர் பிச்சை ஆகியோருக்கு காங்கிரஸ், திமுக உள்ளிட்ட 28 கட்சிகள் அடங்கிய இந்தியா கூட்டணி கடிதம் எழுதியுள்ளது.

அந்த கடிதத்தில், இந்தியா கூட்டணியானது 28 எதிர்க்கட்சிகளை கொண்ட கூட்டணி என்றும், 11 மாநிலங்களில் இக்கூட்டணி ஆட்சியில் உள்ளதென்றும், ஒட்டுமொத்த இந்திய வாக்காளர்களில் ஏறத்தாழ 50 சதவீதம் பேரின் வாக்குகளை இக்கூட்டணி பெற்றுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் மதவாத வெறுப்புணர்வை தூண்டும் பாஜகவின் பிரச்சாரத்துக்கும், சமூக நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் நடவடிக்கைக்கும் Meta நிறுவனத்தின் வாட்ஸ் அப், பேஸ்புக் ஆகியவை துணை போவதாக வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை விரிவாக விசாரணை நடத்தி செய்தி வெளியிட்டிருப்பதாகவும், வாட்ஸ் அப், பேஸ்புக் ஆகியவற்றில் ஆளும் கட்சியினரின் கருத்துகள் ஊக்குவிக்கப்படும் வேளையில், எதிர்க்கட்சிகளின் கருத்துகள் நீக்கப்படுவதோடு, முடக்கம் செய்யப்படுவதாகவும், இதுதொடர்பான தரவுகள் தங்களிடம் இருப்பதாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோல வெளிநாட்டைச் சேர்ந்த தனியார் நிறுவனமானது குறிப்பிட்ட ஒரு அரசியல் அணிக்கு எதிராக அப்பட்டமாக பாகுபாடு காட்டுவது, இந்திய ஜனநாயகத்தில் தலையிடும் செயல் என்றும், இதை இந்தியா கூட்டணி எளிதான விஷயமாக எடுத்துக் கொள்ளாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யூ டியுப் தளத்தை பயன்படுத்தி பா.ஜ.க.வினரும், பா.ஜ.க. ஆதரவாளர்களும் இழிவான வகுப்புவாத பிரிவினைப் பிரச்சாரத்தை மேற்கொண்டிருப்பதாக குற்றம் சாட்டியுள்ள இந்தியா கூட்டணி, இந்த விவகாரத்தை தீவிரமான பிரச்சினையாக கருதி, 2024ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல்களில் சமூகவலைதளங்கள் இந்தியாவில் நடுநிலையுடன் செயல்படுவதையும், இந்தியாவில் சமூக அமைதியின்மையை ஏற்படுத்தவோ அல்லது இந்திய ஜனநாயக கோட்பாடுகளை சிதைப்பதற்கோ பயன்படுத்தப்படாமல் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டுமென்று கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

### காலியாக உள்ள எம்.பி.பி.எஸ். இடங்களை

# மாநில ஒதுக்கீட்டுக்கு ஒப்படைத்து சேர்க்கைத் தேதியை நீட்டிப்பீர்!

## ஒன்றிய அரசுக்கு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கடிதம்!



சென்னை, அக். 14 -

தமிழ்நாட்டில் காலியாக உள்ள எம்.பி.பி.எஸ். மற்றும் பி.டி.எஸ். படிப்பிற்கான இடங்களை மாநில அரசிடம் ஒப்படைத்து சேர்க்கைக்கான கால அவகாசத்தை நீட்டிப்பதன் மூலம் காலியான இடங்களை நிரப்ப இயலும் என்று ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சருக்கு மாநில அமைச்சர் மா.சுப்பிரமணியன் கடிதம் எழுதியுள்ளார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் ஒன்றிய அரசு சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர்.மன்சுக்மாண்டவியா அவர்களுக்கு எழுதிய நேர்முக கடிதம் வருமாறு:

ஒன்றிய அரசு 30 செப்டம்பர் 2023க்குள். நடப்பு கல்வியாண்டில் 2023 - 2024 ஆம் ஆண்டுக்கான இளங்கலை (MBBS மற்றும் BDS) மருத்துவ சேர்க்கைக்காக, தமிழ்நாடு மருத்துவ ஆலோசனைக் குழு (MCC), சுகாதாரசேவைகளின் பொது இயக்குநரகம் (DGHS) ஆகியவற்றின் ஒருங்கிணைப்பில் நான்கு சுற்று கவுன்சிலிங்கை முழுமையாக நிறைவு செய்துள்ளது.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாநில ஒதுக்கீட்டின் கீழ் உள்ள அனைத்து எம்.பி.பி.எஸ். இடங்களும் நிரப்பப்பட்டுவிட்டன, மேலும் சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் உள்ள அரசு ஒதுக்கீட்டு இடங்களும் மாநில அரசால் நிரப்பப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இருப்பினும், தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள புகழ்பெற்ற அரசு மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்த அகில இந்திய ஒதுக்கீட்டின் கீழ் 16 இடங்கள் DGHS இன் MCC இன் கவுன்சிலிங்கின் முடிவில் இன்னும் காலியாக உள்ளது என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம்.

மேலும், மதுரையில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் 3 இடங்களும், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் 50 இடங்களும், தமிழகத்தில் உள்ள சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் 17 இடங்களும் (மேலாண்மை ஒதுக்கீடு) காலியாக உள்ளன.

ஒவ்வொரு எம்.பி.பி.எஸ். இடமும் விரும்பத்தக்கது மற்றும் மதிப்புமிக்க தேசிய வளம் என்பது உங்களுக்குத் தெரியும், மேலும் இந்த இடங்களுக்கு வருவதற்கு லட்சக்கணக்கான மாணவர்கள் காத்திருக்கிறார்கள்.

இந்த இடங்களை மாநில ஒதுக்கீட்டுக்கு ஒப்படைத்து, எம்.பி.பி.எஸ். சேர்க்கைக்கான கடைசி தேதியை தேசிய மருத்துவ ஆணையம் நீட்டித்து, மேலும் கவுன்சிலிங் நடத்த தமிழக அரசுக்கு அனுமதி அளித்தால், இந்த விலைமதிப்பற்ற இடங்களை நிரப்ப முடியும்.

எம்.பி.பி.எஸ். மற்றும் பி.டி.எஸ். படிப்புகளுக்கான வகுப்புகள் தொடங்கப்பட்டிருந்தாலும், இந்த மாணவர்களுக்கு சிறப்பு அமர்வுகளை நடத்துவதன் மூலம் அவர்களுக்கு இடமளிக்க முடியும்.குறிப்பாக மாணவர்களுக்கும் பொதுவாக நாட்டிற்கும் பயனளிக்கும் வகையில் சாதகமானபதிலைப் பெறுவோம் என்று நம்புகிறோம்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### கடந்த அ.தி.மு.க. ஆட்சியில்

# பிரதமரின் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தில் குளறுபடி!

## கணக்குத் தணிக்கை ஆணையர் அறிக்கையில் தகவல்!

சென்னை, அக். 14 -

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் பிரதமரின் நகர்ப்புற வீட்டு வசதி திட்டத்தை செயல்படுவதில் பல்வேறு குளறுபடி நடந்துள்ளது. அதில், ஒரே வீட்டிற்கு இரண்டு முறை மானியம், பயனாளிகளுக்கு பதில் ஒப்பந்ததாரருக்கு மானியம் வழங்கப்பட்டதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கணக்கு தணிக்கை ஆணையர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டு வசதி திட்டத்தின் வழிகாட்டுதல்கள் வகைகளுக்கு இடையில் நிதியை பகிர்வதைக் குறிப்பிடவில்லை. 2019ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மத்திய அனுமதி மற்றும் கண்காணிப்புக் குழு வாங்கும் திறனுக்கேற்ப கூட்டு முயற்சியில் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் இன்னும் தொடங்கப்படாத திட்டங்களுக்கு மத்திய உதவி நிதியின் பயன்படுத்தப்படாத பகுதியை வாங்கும் திறனுக்கேற்ப கூட்டு முயற்சியில் வீட்டுவசதி திட்டத்திலிருந்து பயனாளிகளுக்கு தனிவீடு கட்டுவதற்கான மானியத்துடன் கூடிய வீட்டுவசதித் திட்டத்தை மாற்றுவதற்கான முன்மொழிவு வீட்டுவசதி அமைச்சகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறியுள்ளது.

கோவை கோட்டத்தில் உள்ள 1,851 பயனாளிகளுக்கு தனிவீடு கட்டுவதற்கான மானியத்துடன் கூடிய வீட்டுவசதித் திட்டத்தின் பயனாளிகளுக்கு ரூ.10.05 கோடி நிலுவைத் தொகையாக வழங்கப்பட உள்ளதாக தணிக்கையில் தெரியவந்துள்ளது. இருப்பினும், கோயம்புத்தூர் மற்றும் சென்னை பெரும்பாக்கத்தில் முறையே ரூ.3 கோடி மற்றும் ரூ.2.59 கோடியை பயனாளிகளுக்கு தனிவீடு கட்டுவதற்கான மானியத்துடன் கூடிய வீட்டுவசதி திட்டத்திலிருந்து வாங்கும் திறனுக்கேற்ப கூட்டு முயற்சியில் வீட்டுவசதி திட்டங்களுக்குத் திருப்பி விட்டன, இது மானியத்துடன் தனிவீடு கட்டுவதற்கான பயனாளிகளுக்கு சிரமத்தை ஏற்படுத்தியது.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் தெற்கு ஒன்றியச் செயலாளர் சரவணகுமார் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் தாமரைக்குளம் பேரூர் பகுதிகளில் இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாமை வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் துவக்கி வைத்தார். உடன் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அஜிப் கான், பேரூராட்சி தலைவர் பால்பாண்டி, பேரூர் செயலாளர் கர்த்தராசு, துணை தலைவர் மலர் சேதுராமன், கவுன்சிலர் பாலாமணி பாலமுருகன், நகரச் செயலாளர் முகமது இலியாஸ் மாவட்ட துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர் பரணீஸ்வரன், தேய்வேந்திரன், ஜெயக்குமார், செல்லத்துரை, முத்துராம், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கார்த்திக், மாவட்டப் பிரதிநிதி சரவணன் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.